## மெட்ரோ ரெயில் மின் பணிகளுக்கு டெண்டர்:

# குளு, குளு ரெயில் நிலையம், எஸ்கலேட்டர், லிப்ட் அமைக்கப்படும்

## பொதுமேலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி தகவல்

சென்னை, பிப்.27– மெட்ரோ ரெயில் மின் பணிகளுக்கான டெண்டர் வழங்கப்பட்டு உள்ளது. இதன்படி, குளு குளு வசதியுடன் மெட்ரோ ரெயில் நிலையங்கள், எஸ்கலேட்டர், லிப்ட், விளக்குகள் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பொதுமேலாளர் (மக்கள் தொடர்பு) எஸ்.கிருஷ்ணமூர்த்தி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

### ரூ.305 கோடிக்கு டெண்டர்

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மெட்ரோ ரெயில்களை இயக்குவதற்காகவும், மெட்ரோ ரெயில் நிலையங்களின் பயன்பாட்டிற்காகவும், மின் பணிகளுக்கான ஒப்பந்தத்தை சீமென்ஸ் ஏ.ஜி.ஜெர்மனி மற்றும் சீமென்ஸ் லிமிடெட் கன்சார்ட்டியம் ஆகிய நிறுவனங்களுக்கு ரூ.305 கோடி மதிப்பீட்டில் வழங்கியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஒப்பந்தக்காரர்கள் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திற்காக, துணை மின் நிலையங்கள் அமைத்து, மெட்ரோ ரெயில்களை இயக்குவதற்காகவும், ரெயில் நிலையங்களில் பயன்படுத்துவதற்காகவும், மின்பகிர்மானம் செய்யும் கட்டமைப்பை உருவாக்கி, மின் பணிகளை செய்து தர வேண்டும்.

### 3 இடங்களில் துணை மின்நிலையங்கள்

தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு 60 எம்.வி.ஏ. மின்சாரம் வழங்குவதற்காக, 110 கிலோ வாட் திறன் கொண்ட 3 துணை மின் நிலையங்களை கோயம்பேடு, ஆலந்தூர், சென்னை சென்டிரல் ஆகிய இடங்களில் அமைத்து வருகிறது.

இதிலிருந்து பெறப்படும் 110 கிலோ வாட் மின்சாரத்தை, மெட்ரோ ரெயில்களை இயக்குவதற்காக 25 கிலோ வாட் மின்சாரமாக குறைத்து வழங்குவதற்காகவும், மெட்ரோ ரெயில் நிலையங்களில் குளு குளு வசதி, எஸ்கலேட்டர், மின்தூக்கி, விளக்குகள், சுரங்கப்பாதைகளில் ஏற்படுத்தப்படும் காற்றோட்டம் போன்றவற்றிற்காக 33 கிலோ வாட் மின்சாரமாக குறைத்து வழங்குவதற்காகவும், 3 துணை மின் நிலையங்களை ஒப்பந்ததாரர்கள் வடிவமைத்து, கட்டி, மின்பகிர்மான அமைப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

### டீசல் ஜெனரேட்டர்

இந்த துணை மின் நிலையங்கள் அனைத்தும் நவீன தொழில்நுட்பமும், எளிய பராமரிப்பு வசதியும் கொண்டவையாக இருக்கும். மின்தடை ஏற்படும் நேரத்தில், மெட்ரோ ரெயில் மற்றும் ரெயில் நிலையங்களுக்கு தொடர்ந்து மின்சாரம் கிடைக்கும் வகையில் மாற்று ஏற்பாடுகளுக்கும் வசதி இருக்கும். இதுதவிர ஒவ்வொரு மெட்ரோ ரெயில் நிலையத்திலும் டீசல் ஜெனரேட்டர் அமைக்கப்படும்.

இந்த திட்டத்திற்காக ஏற்படுத்தப்படும் அனைத்து மின் அமைப்புகளும், கோயம்பேட்டில் அமையவுள்ள மத்திய கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கண்காணித்து இயக்கப்படும். ஒப்பந்தக்காரர்கள் மின் அமைப்புகளை உருவாக்கித் தருவதுடன் 2 ஆண்டுகளுக்கு பராமரிப்புப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.